(2022)4 எஸ்.சி.ஆர் 840

மகாராஷ்டிரா மாநில அரசு மற்றும் பலர்
–எதிர்–
கிரேட்ஷிப் (இந்தியா) லிமிடெட்

உரிமையியல் மேல்முறையீடு எண் 4956/2022

2022, செப்டம்பர் 20

மாண்புமிகு நீதியரசர் திரு எம்.ஆர். ஷா
மற்றும்
மாண்புமிகு நீதியரசர் திரு. வி. நாகரத்னா

மாற்றுப் பரிகாரம் – கிடைக்கப்பெறும் – இந்திய அரசமைப்புச் சட்டம் – வகுமுறைக்கூறு 226–இன் கீழ் நீதிப்பேராணை மனு, ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக – மகாராஷ்டிரா மதிப்புக் கூட்டுவரிச் சட்டம், 2002 – பிரிவு 23 – மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 – மேற்சொன்ன சட்டங்களின்படி, வரிச்சுமையை வட்டி மற்றும் அபராதத்துடன் செலுத்த மதிப்பீட்டு அதிகாரியால் வரி மதிப்பீட்டு உத்தரவு வழங்கப்பட்டது – எதிர்மனுதாரர்/வரிவிதிப்புக்குரியவர், காலவரையறையின் அடிப்படையில் வரி மதிப்பீட்டு உத்தரவை எதிர்த்து நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தார் – உயர் நீதிமன்றம் வரி மதிப்பீட்டு உத்தரவையும் கேட்பு அறிவிக்கையையும் நீக்கறவு செய்தது – மேல்முறையீட்டு மனு மீது வழங்கப்பட்ட தீர்ப்புரை மதிப்பீட்டு அலுவலரால் வழங்கப்பட்ட வரி மதிப்பீட்டு உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்யும் உரிமையையும், முதல் மேல்முறையீட்டு அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராகத் தீர்ப்பாயத்தின் முன்பு மேல்முறையீடு / சீராய்வு மூலம் செய்யும் உரிமையையும்

சட்டங்கள் வகைச் செய்கிறது – எனவே, மாற்று/சட்டரீதியானப் பரிகாரம் கிடைக்கும்போது, நீதிமன்றம் அரசமைப்பு வகையங்களின் கீழ் தனது அதிகாரத்தைச் செலுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்று நீதிசார் நன்னறிவு கோருகிறது – வரி மதிப்பீட்டு உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226–இன் கீழ் ஏற்றுக்கொண்டு சட்டமுறையான பரிகாரங்கணை புறக்கணித்ததில் உயர் நீதிமன்றம் பொரும் பிழைப் புரிந்துள்ளது – மேல்முறையீடு மூலம் கிடைக்கும் சட்டமுறையான பரிகாரங்களைப் பெறுவதற்கும் அதன் பிறகு சட்டத்தால் வகை செய்யப்பட்டுள்ள மற்ற பரிகாரங்களைப் பெறுவதற்கும் எதிர்மேல்முறையீட்டாளரை அனுப்பியிருக்கவேண்டும் – மேல்முறையீட்டில் சட்டமுறையான பரிகாரத்தை தவிர்த்ததற்கான எந்த நியாயமான பரிகாரங்களையும் எதிர்மேல்முறையீட்டாளர்கள் வெளிப்படுத்தவில்லை – மேலும், பொருண்மைகளின் அடிப்படையில், வரி மதிப்பீட்டு உத்தரவு 20.03.2022 அல்லது 14.07.2022 (வரி விதிப்புக்குரியவரின் குற்றச்சாட்டுப்படி) அன்று உத்தரவிடப்பட்டதா என்பது கடும் சர்ச்சைக்குரியதாக இருக்கின்றன – எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு நீக்கறவு செய்யப்படுகிறது – உயர் நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்படுகிறது – மகாராஷ்டிரா மதிப்புக் கூட்டுவரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் மேல்முறையீட்டில் முறையான பரிகாரத்தையும், மற்ற பரிகாரங்களையும் பெறுவதற்கு எதிர்மேல்முறையீட்டாளர் அனுப்பப்பட்டார்.

யுனைடெட் பேங்க் ஆப் இந்தியா –எதிர்– சத்யவதி டாண்டன் மற்றும் பலர் (2010) 8 எஸ்.சி.சி. 110 : (2010)9 எஸ்.சி.ஆர் 1 (சார்வுறப்பட்டது)

மேற்கோள் காட்டப்பட்ட மற்ற வழக்குகள்

டிட்டாகூர் பேப்பர் மில்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– ஒரிஸா மாநில அரசு (1983) 2 எஸ்.சி.சி. 433 : (1983) 2 எஸ்.சி.ஆர் 743 ; பஞ்சாப் நேஷனல் பேங்க் –எதிர்– ஓ.சி. கிருஷ்ணன் (2001) 6 எஸ்.சி.சி. 569 (2001) 1 சப்ளிமென்ட் எஸ்.சி.ஆர் 466; ராஜ்குமார் ஷிவ்ஹரே –எதிர்– அமலாக்கத் துறை இயக்குநரகம் (2010) 4 எஸ்.சி.சி. 772 (2010) 4 எஸ்.சி.ஆர் 608 ;திருவாளர்கள் பில்டர்கோ மற்றும் ஒருவர் –எதிர்– விற்பனை வரி ஆணையர், மத்தியப் பிரதேசம் மற்றும் ஒருவர் (1986)2 எஸ்.சி.சி. 103 (1986) 1 எஸ்.சி.ஆர் 239 ;உதவி ஆணையர் (வணிகவரி), எல்டியு மற்றும் ஒருவர் –எதிர்– அமரராஜா பேட்டரீஸ் லிமிடெட் (2009) 8 எஸ்.சி.சி 209 (2009) 11 எஸ்.சி.ஆர் 953; வேர்ல்பூல் நிறுவனம் –எதிர்– வணிக முத்திரைகளின் பதிவாளர், மும்பை (1998) 8 எஸ்.சி.சி. 1 ; (1998) 2 சப்ளிமென்ட் எஸ்.சி.ஆர். 359.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

(1983) 2 எஸ்.சி.ஆர். 743. (பத்தி 4.2)

(2001) 1 சப்ளி எஸ்.சி.ஆர். 466 (பத்தி 4.2)

(2010) 4 எஸ்.சி.ஆர். 608 (பத்தி 4.2)

(2010) 9 எஸ்.சி.ஆர். 1 (பத்தி 4.2)

(1986) 1 எஸ்.சி.ஆர். 239 (பத்தி 5.1)

(2009) 11 எஸ்.சி.ஆர். 953 (பத்தி 5.1)

(1998) 2 சப்ளி. எஸ்.சி.ஆர். 359 (பத்தி 5.1)

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண் 4956/2022.

நீதிப்பேராணை மனு (மத்திரை) எண் 92630/2020–இல் 30.04.2021 அன்று மும்பை உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையிலிருந்து எழுகிறது.

சச்சின் பாட்டீல், ராகுல் சிட்னிஸ், ஆதித்யா ஏ. பாண்டே, ஜியோ ஜோசப், செல்வி ஷ்வேதல் சிபல் ... மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞர்கள்

ர்ஃபிக் தாதா, முதுநிலை வழக்குரைஞர், அஜய் பார்கவா, திருமதி வனிதா பார்கவா, சுதிப்தா பட்டாச்சார்ஜி, ஓம்கார் ஷர்மா, ஆரியதீப் ராய், செல்வி திரிஷலா திரிவேதி, திருவாளர்கள் கைத்தான் கம்பெனி ... எதிர்மேல் முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞர்கள்

தீர்ப்புரை

நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா அவர்களால் வழங்கப்பட்டது.

1. இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 226–இன் கீழான அதிகாரங்களைச் செலுத்தி, மதிப்பீட்டு அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட வரி மதிப்பீட்டு உத்தரவையும் காலந்தாழ்த்தி அனுப்பப்பட்ட கேட்பு அறிவிக்கையையும் நீக்கறவு செய்து நீதிப்பேராணை மனு (முத்திரை) எண் 92630/2020–இல் மும்பை உயர் நீதிமன்றத்தால் 30.04.2021 அன்று பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை

மற்றும் உத்தரவில் பாதிப்படைந்து மனக்குறைவுற்ற மகாராஷ்டிரா மாநில அரசு மற்றும் பிறர் இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தனர்.

2. எதிர்மேல்முறையீட்டாளர்–அசல் நீதிப்பேராணை மனுதார் மகாராஷ்டிரா மாநில மதிப்புக்கூட்டுவரி, 2002 (இதில் இதற்குப் பிறகு 'ம.ம.கூ.வ. சட்டம்' என்று குறிப்பிடப்படும்) மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 (இதில் இதற்குப்பிறகு ம.வி.வ. சட்டம் என குறிப்பிடப்படும்) ஆகிய சட்டங்களின் கீழான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மதிப்பீட்டு அதிகாரி 01.02.2018 நாளிட்ட மதிப்பீட்டு அறிவிப்பில், ஏன் மகாராஷ்டிரா மாநில மதிப்புக் கூட்டுவரிச் சட்டம், பிரிவு 23–இன் தொடர்புடைய வகையங்களின் கீழ் மதிப்பீடு செய்யக்கூடாது என்கிற காரண விளக்கம் கோரியும், தொடர்புடைய ஆவணங்களையும் தாக்கல் செய்யும்படியும் விரிவிதிப்பிற்குரியவருக்கு அழைப்பு விடுத்தார்.

2.1. நீதிப்பேராணை மனுதாரரின்படி, 03.05.2018 தேதியிடப்பட்ட கடிதத்தில் கோரப்பட்ட ஆவணங்கள் உரிய விளக்கத்துடன் நீதிப்பேராணை மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டது. தனிப்பட்ட கேட்புகையானது, 16.03.2020 அன்று நடத்த முடிவு செய்யப்பட்டது. எனினும், 16.03.2020 அன்று மதிப்பீட்டு அதிகாரி இல்லாததால், கேட்புகை நடைபெறவில்லை. நீதிப்பேராணை மனுதாரரின் கூற்றுப்படி, 17.03.2020, 18.03.2020 மற்றும் 19.03.2020 ஆகிய நாட்களில் மதிப்பீட்டு அலுவலருக்குத் தனிப்பட்ட கேட்புகை நடத்தும்படி தொலைபேசி மூலம் அழைப்பாணை விடுத்தபோதிலும் அவ்வாறான கேட்புகை நடத்தப்படவில்லை. மனுதாரின் கூற்றுப்படி, 20.03.2020 நாளிட்ட கடிதத்தின்டிப, நிதியாண்டிற்காக

பரிசீலிக்கப்படவேண்டிய தொடர்புடைய ஆவணங்கள் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன, மேலும் தனிப்பட்ட கேட்புகைக்கும் கோரிக்கை வைக்கப்பட்டது. மதிப்பீட்டு அதிகாரி 20.03.2020 அன்று, மகாராஷ்டிரா மதிப்புக் கூட்டுவரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனைவரிச் சட்டம் அகியவற்றின் கீழ் வரிச்சுமையை வட்டி மற்றும் அபராதத்துடன் செலுத்தவேண்டும் என்று தீர்மானித்து உத்தரவிட்டார்.

2.2. முதல் மேல்முறையீட்டு அதிகாரியிடம் மேல்முறையீடு எதவும் செய்யாமல், எதிர்மேல்முறையீட்டாளர் வரிவிதிப்பிற்குரியவர் – அசல் நீதிப்பேராணை மனுதாரர், மகாராஷ்டிரா மதிப்புக் கூட்டுவரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனைவரிச் சட்டத்தின் வகையங்களின்கீழ் பிறப்பிக்கப்பட்டவரி மதிப்பீட்டு உத்தரவை எதிர்த்தும், மேற்படி உத்தரவு 20.03.2020 அன்று பிறப்பிக்கப்படவில்லை என்றும், அது ஜுலை மாதத்தில்தான் பிறப்பிக்கப்பட்டது என்றும், அது காலவரையறையைக் கடந்தது என்றும் குறிப்பிட்டு உயர் நீதிமன்றத்தின் முன்பு நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தார். இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 226–இன் கீழ், வரி மதிப்பிட்டு உத்தரவை எதிர்த்துத் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனுவை உயர் நீதிமன்றம் ஏற்று, வரி மதிப்பீட்டு உத்தரவையும் கேட்புகை அறிவிப்பையும் செல்லாததாக்கி நீக்கறவு செய்து, இந்த எதிர்ப்புக்குள்ளான உத்தரவையும் தீர்ப்பாணையையும் பிறப்பித்துள்ளது.

2.3. உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மூலம் பாதிப்புற்று, அதிருப்தியுற்றதன் பேரில், மகாராஷ்டிர மாநில அரசு மற்றும் பிறர் இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

3. மதிப்பீட்டு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட வரி மதிப்பீட்டு உத்தரவின் மீது தகுதியின் அடிப்படையில், இருதரப்பினருக்காகவும் வாதிட்ட வழக்குரைஞர்கள் பலதரப்பட்ட வாதங்களை முன்வைத்தனர். எனினும், கீழே கொடுக்கப்பட்டுள்ள காரணங்களினால், இந்த நீதிப்பேராணை மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்து, வரி மதிப்பீட்டு உத்தரவுக்கு எதிராக முதல் மேல்முறையீட்டு அதிகார ஆயத்திடம் ஒரு முதல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்ய வரிவிதிப்புக்குரியவரை அனுப்பியிருகக்வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். ஆகையால், தகுதியின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட வாதங்களை நாங்கள் விவரிக்கவில்லை.

4. மேல்முறையீட்டாளர்களுக்காக வாதிட்ட கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சச்சின் பாட்டீல், மகாராஷ்டிரா மதிப்புக் கூட்டுவரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனைவரிச் சட்டம் ஆகியவற்றின் விதிகளின் கீழ் மதிப்பீடு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட வரிமதிப்பீட்டு உத்தரவிற்கு எதிராக இந்திய அரசமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 226-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை ஏற்றிருக்கக்கூடாது என்று முனைப்புடன் வாதிட்டார்.

4.1. வரிவிதிப்பிற்குரியவர், முதல்மேல்முறையீட்டு அதிகாரி முன்பு மேல்முறையீடு மூலம் மாற்றுப் பரிகாரத்தைப் பெறுவதற்கு வழிவகை இருந்தது, மேலும் வரி மதிப்பீட்டு உத்தரவு 20.03.2020 அன்று பிறப்பிக்கப்பட்டதா அல்லது

14.07.2020 அன்று (வரிவிதிப்புக்குரியவரின் குற்றச்சாட்டுப்படி) பிறப்பிக்கப்பட்டதா என்கிற மிகக் கடும் சச்சரவுக்குரிய பொருண்மைகள் இருந்தது, எனவே, அவ்வாறான பரிகாரத்தைப் பெற்றிருக்கவேண்டும் என்கிற வாதத்தை மேல்முறையீட்டாளர்களுக்காக வாதிட்ட கற்றறிந்த வழக்குரைஞர் முன்வைத்தார்.

4.2. மேலே சமர்ப்பிக்கப்பட்ட வாதங்களையும் டிட்டாகூர் பேப்பர் மில்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– ஒரிசா மாநில அரசு (1983)2 எஸ்.சி.சி 433 பஞ்சாப் நேஷனல் பேங்க் –எதிர்– ஓ.சி. கிருஷ்ணன் (2001)6 எஸ்.சி.சி. 569 ராஜ்குமார் ஷிவ்ஹரே –எதிர்– அமலாக்கத்துறை இயக்குநரகம் (2010)4 எஸ்.சி.சி. 772 மற்றும் யுனைடெட் பேங்க் ஆப் இந்தியா –எதிர்– சத்யவதி டாண்டன் மற்றும் பலர் (2010)8 எஸ்.சி.சி. 110 ஆகிய தீர்ப்புகளையும் மேற்கோள்காட்டி சமர்ப்பிக்கப்பட்ட இந்த மேல்முறையீட்டை அனுமதிக்கக் கோரி முறையீடு செய்துள்ளனர்.

5. எதிர்மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திருவாளர் ர்ஃபீக் தாதா, வரி மதிப்பீட்டு உத்தரவானது, 20.03.2020 அன்று பிறப்பிக்கப்படவில்லை என்றும், அது பின்னிட்ட காலமான அதாவது, 31.03.2020–க்கு பிறகுதான் பிறப்பிக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும், ஆதலால் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட காலத்திற்குப் பின்னால் வரி மதீப்பீட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பதிவாவணத்தின் சான்றுகளைப் பரிசீலித்து கருத்துரைத்த உயர் நீதிமன்றம், வரி மதிப்பீட்டு உத்தரவைச் செல்லாததாக்கி நீக்கறவு செய்ததன் மூலம் நீதிப்பேராணை மனுவை அனுமதித்தது நியாயமானது என்று பணிந்துரைத்தார்.

5.1 எதிர்மேல்முறையீட்டாளர்–வரிவிதிப்புக்குரியவர் சார்பாக வாதிட்ட கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திருவாளர் ர.ஃபீக் தாதா அவர்கள் தன்னுடைய வாதங்களுக்கு ஆதரவாக இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புகளை மேற்கோள்காட்டி, உயர் நீதிமன்றம் வரி மதிப்பீட்டு உத்தரவுக்கு எதிரான மனுவை ஏற்றுக்கொண்டது சரிதான் என்ற வாதத்தையும் முன்வைத்தார்.

1. திருவாளர்கள் ஃபில்டெர்கோ மற்றும் ஒருவர் –எதிர்– விற்பனைவரி ஆணையர், மத்தியப் பிரதேசம் மற்றும் ஒருவர், (1986) 2 எஸ்.சி.சி. 103;

2. உதவி ஆணையர் (வணிகவரி) எல்.டி.யூ. மற்றும் ஒருவர் –எதிர்– அமர ராஜா பேட்டரீஸ் லிமிடெட், (2009) 8 எஸ்.சி.சி 209 ; மற்றும்

3. வேர்ல்பூல் நிறுவனம் –எதிர்– வணிக முத்திரைப் பதிவாளர், மும்பை, (1998) 8 எஸ்.சி.சி. 1.

5.2. அசல் நீதிப்பேராணை மனுதாரருக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் இநத் வழக்கில் முந்தைய வரி மதிப்பீட்டு உத்தரவில் வரிவிதிப்புக்குரியவருக்கு எதிராக முதல் மேல்முறையீட்டு அதிகார ஆயத்தின் மூலம் தகுதியின் அடிப்படையில் ஒரு தீர்வு இருந்தது என்றும், முதல் மேல்முறையீட்டு ஆயத்தில் ஒரு மேல்முறையீடு செய்வது ஒரு நடைமுறையாக இருக்கலாம் என்றும் மேற்கொண்டு சமர்ப்பித்து, அசல் மனுதாரர் சரியான முறையில்தான் நீதிப்பேராணை மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றும் வாதிட்டார்.

6. இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் நீண்ட வாதங்களையும் கேட்டறிந்தோம்.

தொடக்கத்தில், மகாராஷ்டிரா மாநில மதிப்புக் கூட்டுவரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் பிறப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அதிகாரியின் வரி மதிப்பீட்டு உத்தரவை எதிர்த்து வரிவிதிப்புக்குரியவர் இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக் கூறு 226-இன் கீழ் நீதிப்பேராணை மனுவை நேரடியாகத் தாக்கல் செய்ய வரும்பியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. மதிப்பீட்டு அதிகாரியின் வரி மதிப்பீட்டு உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கும், முதல் மேல்முறையீட்டு அதிகார ஆயத்தின் மேல்முறையீடு/ சீராய்வை எதிர்த்து தீர்ப்பாயத்தின் மன்பு மேல்முறையீடு செய்வதற்கு சட்டங்களின் மூலம் கிடைக்கும் உரிமையைப் பெறுவதில் எந்தவித சர்ச்கையும் இல்லை. அந்த விடையத்தை கருத்திற்கொண்டு பார்க்கையில் சட்டரீதியான தீர்வுகள் சட்டத்தின் வாயிலாக கிடைக்கும்பொழுது, இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 226-இன் கீா வரி மதிப்பீட்டு உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடாது. இந்த நிலையில், இந் நீதிமன்றம் "சத்யவதி டேண்டன்" என்ற வழக்கின் தீர்முடிவில், சட்டப் பரிகாரங்களை மீறி, இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 226-இன் கீழ் நீதிப்பேராணை மனுவைப் பரிசீலித்து அனுமதித்ததைக் குறித்துக்காட்ட அவசியமாகிறது. பத்திகள் 49 இலிருந்து 52 வரையுள்ள இந்த நீதிமன்றத்தின் முந்தையத் தீர்முடிவுகளைக் கருத்திற்கொண்ட பின்னர் தீர்மானித்ததாவது:

"49. டிட்டாகூர் பேப்பர் மில்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– ஒரிசா மாநிலம் (1983)2 எஸ்.சி.சி. 433–இல் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் சிசிஇ –எதிர்– டன்லப் இந்தியா லிமிடெட் (1985)1 எஸ்.சி.சி. 260–இன் தீர்ப்பின் கீழ்க்கண்ட வாக்கியங்களில் எதிரொலித்தது (எஸ்.சி.சி. பக்கம் 264, பத்தி 3)

"3....வகுமுறைக்கூறு 226 குறுகியச் சுற்றோ அல்லது சட்டநடைமுறையை மீறுதல் என்றோ பொருளாகாது. அங்கே, அசாதாரண சூழ்நிலைகளில் சட்டத் தீர்வுகளின் தேவைகளைப் பெறுவதற்கு முற்றிலும் பொருத்தமற்றதாக இருக்கிறது. உதாரணமாக, சட்டத்தின் முரண்பாடுகள் கேள்விக்குரியதாகவோ அல்லது தனிப்பட்ட அல்லது பொது தவறுகள் பிரிக்கமுடியாமல் கலந்திருந்தாலோ அல்லது பொது காயத்தைத் தடுப்பதற்கு, பொது நீதியை நியாயப்படுத்துவதற்கும் அரசமைப்புச்சட்டத்தின் வகுமுறைக்கூறு 226–ஐ பயன்படுத்தவேண்டும். ஆனால், அப்போது சட்டத்தின்மூலம் ஏற்படுத்தப்பட்ட மாற்றுத் தீர்வை நீதிமன்றம் மீறுவதற்கு போதுமான நல்ல காரணங்களைப் பெற்றிருக்கவேண்டும். நிச்சயமாக, வருவாய் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்கு சட்டரீதியான தீர்வுகள் கிடைக்கும்போது இவையெல்லாம் ஒரு பொருட்டல்ல. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226–இன் கீழ், வெறும் இடைக்கால ஆணைகளைப் பெறுவதற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஏராளமான மனுக்களையும், அதன் பிறகு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் மூலம் அவைகளை நீட்டிபப்தின் உண்மைத்தன்மையையும்

நீதித்துறை கவனத்தில் கொள்ளமுடியும். இந்த நடைமுறையைக் கட்டாயமாக ஊக்குவிக்கக் கூடாது.

50. பஞ்சாப் நேசனல் வங்கி –எதிர்– ஓ.சி. கிருஷ்ணன் (2001) 6 எஸ்.சி.சி. 569 என்கிற வழக்கில், கடன் மீட்புத் தீர்ப்பாயச் சட்டம், பிரிவு 19–இன் கீழ் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து, அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 227–இன் கீழ் தொடரப்பட்ட மனு நிலைக்கத்தக்கதா என்கிற கேள்வியை இந்த நீதிமன்றம் பரிசீலித்து, கவனத்தில் கொண்டது: (எஸ்.சி.சி. பக்கம் 570, பத்திகள் 5–6)

"5. எங்களின் கருத்துப்படி, அடமானத்தில் வைக்கப்பட்ட சொத்தை விற்பனை செய்ய உத்தரவிட்ட தீர்ப்பாயத்தின் ஆணையை, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அளித்த கடன்களை திரும்பப் பெறுதல் சட்டம், 1993, பிரிவு 20–இன் கீழ் (இனி சுருக்கமாக "சட்டம்" என்றழைக்கப்படும்) மேல்முறையீடு செய்யத் தகுதியுடையது. சட்டத்தில் மாற்றுத் தீர்வுக்கான விதி அடங்கியிருக்கும்போது, உயர் நீதிமன்றம் வகுமுறைக்கூறு 227–இன் கீழ் கொடுக்கப்பட்ட அதன் அதிகாரவரம்பை செயல்படுத்தியிருக்கக்கூடாது. தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை சரியானதுதானா அல்லது இதனை அது சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள்தான் முடிவு செய்யவேண்டுமா என்கிற உயர் நீதிமன்றத்தின் முடிவு சரியானதுதான் என்கிற கருத்தை நாங்கள் முன்மொழியவில்லை.

6. வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் செலுத்தவேண்டிய கடன்களைத் திரும்பப் பெறுவதைக் கருத்தில்கொண்டு சட்டம் ஒரு சிறப்பு நடைமுறையைச் செயல்படுத்தியிருக்கிறது. மேல்முறையீட்டு படிநிலைகளை ஏற்படுத்திய இந்தச் சட்டத்தில், அதாவது, பிரிவு 20–இன் கீழ் ஒரு மேல்முறையீடு செய்வதுபோன்ற இந்த விரைவு நடைமுறைறை, இந்திய அரசமைப்பு வகுமுறைக்கூறுகள் 226 மற்றும் 227–இன் நடவடிக்கைகளின் கீழ் செயல்படுத்துவதன் மூலமாகவோ அல்லது ஒரு உரிமையியல் வழக்குத் தொடர்வதன் மூலமாகவோ தடம்புரள அனுமதிக்கமுடியாது. இவை வெளிப்படையாக தடைசெய்யப்பட்டுள்ளது. சட்டத்தின் கீழான வகுமுறையும் அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக் கூறுகள் 226 மற்றும் 227 நீதிமன்றத்தின் அதிகார வரம்பை வெளிப்படையாக நீக்கமுடியாது. என்றாலும், மாற்றுப் பரிகாரம் இருந்தும் நீதிச்சார் நன்னறிவானது, மேற்படி அரசமைப்பு வகையங்களின் கீழ் தனது அதிகாரவரம்பை செயல்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்று கோருகிறது. உயர் நீதிமன்றம் இந்த வழக்கை அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 227–இன் கீழ் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடாது என்றும் எதிர்மேல்முறையீட்டாளருக்கு சட்டம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் மேல்முறையீடு செய்யும் வழிமுறையை எடுத்துரைத்து அதனை செயல்படுத்த உத்தரவிட்டிருக்கவேண்டும்.

51. சிசிடி –எதிர்– இந்திய எக்ஸ்ப்லோசிவ்ஸ் லிமிடெட் ((2008)3 எஸ்.சி.சி. 688) என்கிற வழக்கில் மாற்றுப் பரிகாரத்தைப் பயன்படுத்துவது தொடர்பான

பல்வேறு வழக்குகளில் இந்த நீதிமன்றம் வகுத்துரைத்துள்ள அளவீடுகளை உயர் நீதிமன்றம் முற்றிலும் புறக்கணித்துள்ளது என்ற கருத்துரைத்ததுடன் ஒரிசா விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் எதிர்மனுதாருக்கு வழங்கப்பட்ட காரணம் கோரும் அறிவிப்பை நீக்கறவு செய்து, ஒரிசா உயர் நீதிமன்ற நீதியராயத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இந்நீதிமன்றம் எதிர்மறையாக்கியது.

52. நகர மற்றும் தொழில் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் –எதிர்– தோசு ஆர்தீர்சீர் பிவாண்டிவாலா (2009) 1 எஸ்சிசி 168 என்ற வழக்கில், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக் கூறு 226–இன் கீழ் அதிகாரவரம்பைப் பயன்படுத்தும்போது, உயர் நீதிமன்றம் கருத்திற்கொள்ளவேண்டிய அளவீடுகளை நீதிமன்றம் எடுத்துக்காட்டியது. அந்தத் தீர்ப்பின் பத்திகள் 29 மற்றும் 30–இல் இந்த நீதிமன்றத்தின் கருத்துக்கள் பின்வருமாறு (எஸ்சிசி பக்கங்கள் 175–176)

> "29 எங்களின் கருத்துப்படி, உயர் நீதிமன்றம் அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226–இன் கீழ் தனது சிறப்பு அதிகாரவரம்புரையைச் செயல்படுத்தும் உண்மைகளையும் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, மாநில அரசு மற்றும் அதன் கீழ் செயல்படும் சட்ட செயலிகள் மூலம் முறையான பிரமாண வாக்குமூலங்கள் இல்லாவிட்டாலுங்கூட எந்தவொரு வழக்கிற்கும், பதிவில் கிடைக்கப்பெறும் முக்கிய விவரங்களின் அடிப்படையில் அதன் தலையீடு தேவையா என்பதைத் தனக்குத் தானே தீர்மானிப்பது இன்றியமையாக் கடமையாகும். ஒரு பொது சட்டப் பரிகாரத்தில், நீதிமன்றகளின் முன்தோன்றாத்தரப்பினர்களின் வலியுறுத்தும்

நீதிப்பேராணை மனுமீது வழங்கும் ஆணை அல்லது வழகாட்டுதலை உத்தரவிடுவதுபோன்ற எதுவும் அங்கில்லை. மேலும், எதிர்ப்புக்குள்ளான நடவடிக்கை அல்லது நடவடிக்கை இன்மையின் செல்லுந்தன்மை பரிசீலிக்கயில், நீதிமன்றம், மாநில அரசின் கோரிக்கைகளுக்குக் கட்டுப்படாமல், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226–இன் கீழான சிறப்பு அதிகார வரம்பைச் செயல்படுத்த ஒரு நபரால் ஏதேனும் வழக்கு நிறுவப்பட்டுள்ளதா?என்பதையும் சுதந்திரமாகப் பரிசீலிக்கவேண்டும்.

30. உயர் நீதிமன்றம் தன்னுடைய அதிகார வரம்பை அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226–இன் கீழ் செயல்படுத்தும்போது,

அ) நீதிப்பேராணை மனுவில் ஏதேனும் சிக்கலான மற்றும் சர்ச்சைக்குரிய சங்கதிகளின் கேள்விகளை உள்ளடக்கியிருக்கிறதா? மேலும் அவைகள் திருப்திகரமாக தீர்க்கப்படுமா ?

ஆ) அந்த மனு எல்லா முக்கிய சங்கதிகளையும் வெளிப்படுத்துகின்றனவா?

இ) பிரச்சினையைத் தீர்வுகாண மனுதாரருக்கு ஏதேனும் மாற்று அல்லத பயனுள்ளப் பரிகாரம் உள்ளனவா?

ஈ) அதிகார வரம்பைச் செயலுறுத்தும் நபர், விளக்கப்படாத மட்டுமீறிய தாமதத்திற்கான குற்றவாளியா?

உ) ஏதாவது காலவரையறைச் சட்டங்களால் வெளிப்படையாகத் தடைச் செய்யப்பட்டுள்ளதா?

ஊ) வழங்கப்படும் நிவாரணம், பொதுக் கொள்கைக்கு எதிரானதாகவோ அல்லது செல்லத்தக்க சட்டம் மற்றும் பிற காரணிகளால் தடை செய்யப்பட்டுள்ளதா? என்பன் போன்றவைகளைக் கவனத்தில் கொண்டு தீர்மானிப்பது நீதிமன்றத்தின் கடமையாகும்.

நீதிமன்றம் பொருத்தமான வழக்குகளில் அதன் தனிப்பட்ட விருப்பத்தின்கீழ், குறிப்பாக, பொது வருவாய் மற்றும் பொது நலன் சம்பந்தப்பட்ட வழக்குகளை, முறையான பிரமாணப் பத்திரங்களுடன் சம்பந்தப்பட்ட எல்லா அம்சங்களையும் உண்மையாகவும் துல்லியமாகவும் முன்வைத்து நீதிமன்றத்தின் பரிசீலனைக்காக மாநில அரசையோ அல்லது அதன் கீழ் செயல்படும் சட்ட செயலிகள் மூலமோ தாக்கல் செய்ய உத்தரவிடலாம். இதுபோன்ற வழிகாட்டுதல்களை மாநில அரசு எப்பொழுதும் கடைப்பிடிக்கவேண்டும். ஒரு பொது சட்டப்பரிகாரத்தில் மாநில அரசு நீதிப்பேராணை மனுவை எதிர்த்து எதிர் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லையென்றால் அதன் அடிப்படையில் நிவாரணம் வழங்கமுடியாது. மேலும் அரசுத்தரப்பிற்காக வாதிடக்கூடியவர்கள் சமர்ப்பிக்கும் வெற்று அல்லது பயனற்றப் பிரமாணப் பத்திரங்களை அல்லது வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு நபருக்கு ஒரு சட்டத் தீவின் மூலம் நிவாரணம் அளிப்பதன் அடிப்படையை உருவாக்காது என்பதால், மற்றபடி, சட்டத்தில் அந்தத் தீர்வைப் பெற அவருக்கு உரிமை இல்லை."

53. ராஜ்குமார் ஷிவ்ஹரே -எதிர்- அமலாக்கத்துறை இயக்குநரகம் [(2010) 4 எஸ்.சி.சி.772] என்கிற வழக்கில், அந்நிய பணப்பரிமாற்றச் சட்டம், 1999-இன் கீழ்

கிடைக்கும் மாற்றுச் சட்டத் தீர்வை மீற முடியுமா, அரசியலைப்பு சட்டத்தின் வகுமுறைக் கூறு 226-இன் கீழ் நீதிமன்றம் தனது அதிகார வரம்பை செயல்படுத்த முடியுமா போன்ற பிரச்சினைகளை இந்த நீதிமன்றம் கையாண்டது. சட்டத்தின் இந்த திட்டங்களைப் பரிசீலனை செய்த பிறகு, நீதிமன்றம் கருத்துரைத்ததாவது : (எஸ்.சி.சி. பக்கம் 781, பத்திகள் 31-32).

"31. சட்டத்தின்மூலம், குறைகளைத் தீர்ப்பதற்காகவே சட்டரீதியான மன்றமும் அதனுடன் ஒரு நிதிச் சட்டமும் உருவாக்கப்பட்டிருப்பதால், சட்டரீதியான தீர்வுகள் பெறுவதைத் தவிர்க்கும் ஒரு நீதிப்பேராணை மனுவை ஏற்றுக்கொள்ளக் கூடாது. இந்த வழக்கின் சட்ட எழுவினாவானது, உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டிற்கான நீதிமன்றமா என்பதே ஆகும். நீதிப்பேராணை அதிகாரவரம்பிற்கு உட்பட்ட உயர் நீதிமன்றத்தின் நீதிசார் மறு ஆய்வை நாடி ஒரு வழக்காடி அதனைக் கைவிடப்படவோ, விட்டுச் செல்லவோ கூடாது. உயர் நீதிமன்றம், பெரும் மதிப்புடன் வழக்கின் இந்த அம்சத்தை மதிப்பிடாமல், வெளிப்படையான பிழைக்குள்ளானது. இருப்பினும் பிராந்திய நீதித்துறை அதிகார வரம்பின் குறைபாடகளைக் கொண்டிருப்பதால் நீதிப்பேராணை மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிறது.

32. அந்நிய பணப்பரிமாற்ற நிர்வாகச் சட்டம், பிரிவு-35 இன் கீழ் உயர் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகார வரம்பு, ஏன் ஒரு பயனுடையப் பரிகாரத்தை அளிக்கவில்லை என்பதை விளக்குவதற்கான காரணம் மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞரால் அளிக்க முடியவில்லை.

உண்மையில், உயர் நீதிமன்றம் தாமே மேல்முறையிட்டிற்கான மன்றம் என்பதால், எந்த காரணமும் இருக்கமுடியாது.

7. மேற்சொன்ன வழக்கின் தீர்முடிவில் இந்த நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்டச் சட்ட நிலைபாட்டைப் பயன்படுத்தி சட்டரீதியான தீர்வுகளைப் புறக்கணித்து, வரி மதிப்பீட்டு உத்தரவுக்கு எதிராக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை அனுமதித்து உயர் நீதிமன்றம் பெரும் பிழைபுரிந்துள்ளது.

8. எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், இந்த நீதிமன்றத்தின் மேற்படி தீர்முடிவில் சார்ந்து நின்று, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு பிரிவு-226 இன் கீழ் நீதிப்பேராணை மனு நிலைக்கத் தக்கதா என்பது பிரச்சனை அல்ல என்றும், மேல்முறையீட்டில் சட்டமுறையானப் பரிகாரத்தைப் புறக்கணித்து பரி மதிப்பீட்டு உத்தரவுக்கு எதிராக நீதிப்பேராணை மனுவை அனுமதித்ததே பிரச்சனை என்றும் குறிப்பிட்டார். வரிமதிப்பீட்டு உத்தரவு 20.03.2020 அன்று பிறப்பிக்கப்பட்டதா அல்லது 14.07.2020 (வரிவிதிப்புக்குரியவரின் குற்றச்சாட்டுப்படி) அன்று பிறப்பிக்கப்பட்டதா என்பதான சங்கதிகள் பெரும் சச்சரவுக்குரியது. மேல்முறையீடு செய்வதற்கான சட்டத் தீர்வுகளைப் புறக்கணித்தற்கு நியாயமான காரணங்களை வரிவிதிப்புக்குரியவரால் காண்பிக்க முடியவில்லை. ஒரு மாற்றுப் பரிகாரம் கிடைக்கும்போது, நீதிமன்றம் தனது அதிகார வரம்பை அரசமைப்பு விதிகளிலிருந்து செயல்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்ற நீதிசார் நன்னறிவு கோருகிறது என்பதே இந்த நீதிமன்றத்தின் கருத்தாகும்.

9. வழக்கின் உண்மைத்தன்மையையும் சூழ்நிலைகளையும் கருத்தில்கொண்டு, உயர் நீதிமன்றம் வரி மதிப்பீட்டு உத்தரவுக்கு எதிராக நீ.பே.மனுவை அனுமதித்ததில் பெரும் பிழை புரிந்துள்ளது. மேல்முறையீட்டுக்கான சட்டத்தீர்வைப் பெற்றிடவும், அதன்பிறகு சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட மற்றத் தீர்வுகளை பெறும்படியும் நீதிப்பேராணை மனுதார்/வரிவிதிப்புக்குரியவருக்கு உயர் நீதிமன்றம் கட்டளையிட்டிருக்க வேண்டும்.

10. இந்த சூழ்நிலைகளில், உயர் நீதிமன்றத்தின் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பும் தீர்ப்பானையும் இதன்மூலம் செல்லாததாக்கப்பட்டு, நீக்கறவு செய்யப்படுகிறது. வரிமதிப்பீட்டு உத்தரவு மற்றும் அதன் தொடர்பான வரிகேட்பு அறிவிக்கையையும் எதிர்த்து உயர் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்ரோணை மனு இதன் மூலம் தள்ளுபடிச் செய்யப்படுகிறது. எதிர்வாதி/வரிவிதிப்புக்குரியவர், மகாராஷ்டிரா மதிப்புக் கூட்டுவரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனைவரிச் சட்டம் ஆகியவற்றின்கீழ் மேல்முறையீட்டின் சட்டப் பரிகாரத்தையும் மற்றப் பரிகாரங்களையும் பெறுவதற்கு அனுப்பப்படுகிறார். இன்றிலிருந்து நான்கு வார கால அவகாசத்திற்குள் அதுபோன்றதொரு பரிகாரத்தைப் பெற்றால், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், காலவரையறைத் தொடர்பான எந்தவொரு கேள்வியையும் எழுப்பாமல் சட்டத்தின்படி அதன் நற்கூறுகளின் அடிப்படையில் தீர்மானித்து வழக்கைத் தீர்வு செய்யலாம். ஆயினும், சட்டத்தின் கீழான மற்ற நிபந்தனைகள் இருப்பின், அதைப் பூர்த்தி செய்யவேண்டும். வழக்கின் நற்கூறுகளைப் பற்றி இருதரப்பினருக்கும் சாதகமான எந்தக் கருத்தையும் நாங்கள் வெளிப்படுத்தவில்லை என்றும், மற்ற வகையில் தற்போதைய உத்தரவை ரத்துசெய்யக்

கூடிய ரத்து செய்யப்பட்ட உயர் நீதிமன்றத்தின் எந்தவொரு கருத்துரையிலும் பாதிப்படையாமல், மேல்முறையீடு/வழக்கு நடவடிக்கைகளில் அதன்/அவற்றின் நற்கூறுகளைப் பரிசீலிப்பது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு மற்றும்/அல்லது உரிய அதிகாரியின் வரம்பிற்கு உட்பட்டது என்பது தெளிவு. மேற்கூறிய வரையரைகளின் அடிப்படையில், இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. ஆயினும், வழக்கின் சங்கதி மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, செலவுத் தொகை குறித்து உத்தரவு ஏதுமில்லை.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."